2nd November 1962]

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி (சித்தர் கோயில்)

*1141 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதி சித்தர் கோயில் கிராமத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானல் எப்பொழுது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை, ஐயா.

(இ) எழவில்லை.

திரு. சோ. ஆறுமுகம்: சேலம் மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் குறைவாக இருப்பதன் காரணமாக அங்குள்ள மாணவர்கள் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் கூட பயிற்சிப் பள்ளிகளில் இடம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இதைப் பரிசிலனை செய்து, அங்கு இன்னும் அதிகமான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எந்தெந்த மாவட்டத்தில் எத்தனை மாணவர்கள் இடம் கிடைக்காமல் இருக்கிறார்கள் என்பதல்ல கவனிக்கப்பட வேண்டிய விஷயம். எந்த எந்த மாவட்டத்தில் இன்னும் எத்தனை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை என்பதுதான் முக்கியம். மேலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவையாக இருந்தால், புதிய பயிற்சிப் பள்ளிகள் அனுமதிக்கப் படுகின்றன. மேலும் பயிற்சிப் பள்ளிகள் அனுமதிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றியதால்தான், கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட ஊரில் இந்தப் பள்ளி அனுமதிக்கப்படவில்லை.

பஞ்சாயத்து யூனியன் (பணம் கையாடல்)

*1142 கேள்வி.—திரு மு. செல்லய்யா: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா வத்திராயிருப்பு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த இரண்டு பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் பணம் கையாடல் செய்ததாக சர்க்காருக்குப் புகார் வந்திருக்கிறதா?

(இ) அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வத்திராயிருப்பு பஞ்சாயத்து யூனியன் பகுதியில் பஞ்சாயத்துப் பணத்தைக் கையாடியதாக இரண்டு கேஸுகள் அறிவிக்கப்பட்டுள்ளன—ஒன்று கஞ்சாபுரம் பஞ்சாயத்திலிருந்து, மற்றொன்று புதுப்பட்டி பஞ்சாயத்திலிருந்து.